பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 28 புதன்கிழமை | 10.04.2024 | கதிர் 155

# புத்தாண்டில் இருந்தாவது தமிழ் அரசு கட்சி பிளவு, அணிகளிலிருந்து விடுபடவேண்டும்

## அதன் துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உருக்கம்

சித்திரைப் புத்தாண்டில் இருந்தாவது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருப்பவர்கள் அணி, பிளவு என்ற பேதங்களை கடந்து கட்சி என்ற சிந்தனையில் ஒன்றாக செயற்படுவதற்கு திடசங்கற்பம் பூணவேண்டும் என கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கைதமிழ்அரசுக்கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுவது ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையின் பொருளாதாரம் நிமிர்ந்துவிட்டதாகவும் அது கடந்த காலாண்டில் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றுள்ளதாகவும் இந்த ஆண்டில் குறைந்தது 2 சதவீத வளர்ச்சியைப் பொருளாதாரம் பதிவு செய்யும் என்றும் ஆளும் தரப்பு என்னதான் மார் தட்டி வந்தாலும், கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் ஏழைகளின் எண்ணிக்கை இரண்டுமடங்குக்கும் அதிகமாகி உள்ளது என்பதுதான் உண்மையான நிலவரம்.

உலக வங்கி ஏப்ரல் 2 விடுத்த அறிக்கையில் இந்த விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அறிக்கையின்படி, 2019 இல், இலங்கையில் ஏழை மக்கள் தொகை 11% ஆக இருந்தது, 2024 இல், அது 26% ஆக அதிகரித்துள்ளது. அதாவது இரண்டேகால் மடங்குக்கும் அதிகம்.

சர்வதேச நாணய நிதியமும் ஆளும் தரப்பும் இணைந்து மேற்கொள்ளும் பொருளாதார மறுசீரமைப்பை ஒப்பந்தத்தின் படி செயற்படுவது அவசியமானது எனச் சுட்டிக்காட்டியுள்ள உலக ☞ 2

# இன்று ரமழான்

இலங்கையின் பல பகுதிகளில் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இன்று 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள் தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹிஜ்ரி 1445ஆம் ஆண்டின் புனித ஷவ்வால் மாத தலைப் பிறை நாட்டின் சில பிரதேசங்களில் நேற்று மாலை தென்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டமையினால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் நாளை நோன்பு பெருநாளை கொண்டாடவுள்ளனர்.

புனித ஷவ்வால் மாத தலைப் பிறையினை தீர்மானிக்கும் மாநாடு, ரமழான் மாதத்தின் 29ஆம் நாளான நேற்று மஹ்ரிப் தொழுகையினை தொடர்ந்து, கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற பிறைக் குழு கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஒரு சில இடங்களில் பிறை தென்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், பிறை காணப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்த சில ☞ 8

# சஜித் வரத் தயாரென்றால் வரவேற்க நாம் தயார்தான்

## ஐ.தே.க. தெரிவிப்பு

சஜித் பிரேமதாச ரணில்விக்ரமசிங்கவுடன் இணைந்து பயணிக்க முன்வருவாராக இருந்தால் அதனை நாங்கள் மிகவும் அன்புடன் வரவேற்க தயாராக இருக்கிறோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பான பிரதானியுமான ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற இருக்கும் தேர்தல் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் ☞ 8

# வேட்பாளர் பிணைத் தொகையை உயர்த்த அமைச்சரவை அனுமதி

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான பிணைவைப்புத்தொகையை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் சட்டம், நாடாளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தற்போதுள்ள பிணைவைப்பு பணத்தொகையை காலத்திற்கேற்ற வகையில் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பின்னணிக்கு ஏற்ப இற்றைப்படுத்துதல் பொருத்தமானது என அடையாளங் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கமைய ☞ 2

# கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்கும் முறைமை அவசியம்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்து

நாட்டைக் கடன் சுமையிலிருந்து விடுவிப்பதற்கு உரிய முறைமை அமைக்கப்படாவிட்டால் நாட்டு மக்கள் நீண்ட காலம் கடனை செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று வெகுஜன ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் ☞ 8

# 'அரகலய' போராட்ட தொடக்கத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நேற்று

அரகலய மக்கள் போராட்டத்தின் ஆரம்ப நாளின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் நேற்றைய தினமாகும்.

இதனை முன்னிட்டு கொழும்புகோட்டைரயில் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு நாடாளவிய ரீதியில், தனமல்வில, குருநாகல், பெலியத்த, கதுருவெல, களுத்துறை, பத்தேகம, ஹொரண ஆகிய பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டங்களின்போது, அதிகரித்துள்ள விலைவாசிகள், வரிச்சுமை, இந்தியாவுக்கு வளங்களைதாரைவார்க்கின்றமை, சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தம், தேசிய சொத்துக்கள் ஊழல் மோசடிகளுக்கு உள்ளாதல் உள்ளிட்டவற்றுக்கு எதிராக கோசங்கள் எழுப்பப்பட்டதோடு, ரணில், ராஜபக்ஷவின் ஆட்சியில் எதிர்பார்த்த மாற்றங்கள் நடைபெறவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் கருத்து வெளியிடும்போது,

2020 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் ரணிலால் என்ன ☞ 2

# அங்கவீனமுற்ற படையினருக்கு நவீன மின்சார மோ.சைக்கிள்கள்

## ஜனாதிபதி ரணில் நேற்று நேரில் வழங்கினார்

அங்கவீனமுற்ற படையினரின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு ஆளும் தரப்பால் முடிந்த அனைத்து நிவாரணங்களும் வழங்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற 'போரினால் பாதிக்கப்பட்ட படையினருக்கு மின்சார மோட்டார் சைக்கிள் வழங்கும்' நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதன்படி ☞ 8

# மின்சார சபை மறுசீரமைப்புக்கான சட்டமூலம் இந்த வாரம் வெளியாகும்

திருத்தப்பட்ட மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தனது சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

அதற்மைய, மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சட்டமூலம் ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சட்டத் திருத்தம் இந்த வாரத்திற்குள் வர்த்தமானியில் வெளியிடப்படவுள் ளதாகவும் அமைச்சர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மின்சாரத் துறையில் பல்வேறு சீர்திருத் ☞ 2

# 2500 ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முடிவு

'அனைவருக்கும் ஆங்கிலம்' வேலைத் திட்டத்தின் கீழ் ஆங்கில மொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற 2500 ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆங்கில மொழி மூலமான பாடங்களை கற்பிக்கின்ற 765 பாடசாலைகளை 1,000 பாடசாலைகளாக அதிகரிப்பதற்கும், ஆசிரியர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஆங்கில மொழி மூலமான பாடங்களை கற்பிக்கின்ற அனுமதியளிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையை 6,500 வரைக்கும் அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அமைச்சரவையில் 'அனைவருக்கும் ஆங்கிலம்' வேலைத் திட்டத்தின் கீழ் ஆங்கில மொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற 2500 ஆசிரியர் ☞ 2

# விடுமுறை நாளிலும் தபால் சேவை

புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு மத்திய தபால் பரிவர்த்தனைக்கு கிடைக்கப் பெறும் அதிகளவிலான பொருட்களை தாமதமின்றி அனுப்பி வைக்கும் நோக்கில் ஏப்ரல் 12ஆம் திகதி பொது விடுமுறை நாளிலும், கடமையில் ஈடுபடுவதற்கு அனைத்து தபால் ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக ☞ 2

# 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 34(1) பிரிவிற் ☞ 2

# பண்டிகை கால விபத்துக்களை குறைக்க ஆளும் தரப்பு முயற்சி

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களை குறைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஆளும் தரப்பு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதாலேயே 36 சதவீதமான விபத்துகள் ஏற்படுவதாகவும், ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

வங்கி, அதன் மூலமே வறுமையை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் கூற்றுப்படி, அதிகரித்து வரும் பணவீக்கம், வருமான இழப்பு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புதல் குறைதல் போன்ற காரணிகளால் வரையறுக்கப்பட்ட வாங்கும் திறன் வறுமையை அதிகரித்துள்ளது.

உலகவங்கியின் இந்த அறிக்கை மற்றொரு விடயத்தையும் முக்கியமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் சுமார் 60% குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளது என்பதுதான் அந்த அதிர்ச்சிகரமான செய்தி.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மூடப்பட்டமை தொழிலாளர் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உலக வங்கி அறிக்கை கூறுகிறது, 2019 இல் 52.3% ஆக இருந்த நகர்ப்புற தொழிலாளர் படை 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 45.2% ஆகக் குறைந்துள்ளது.

உலக வங்கி அறிக்கையின்படி, இலங்கையில் 17.5% குடும்பங்கள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை எதிர்த்துப் போராடுவதற்காக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான தங்கள் செலவைக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

இப்படி நிலைமை மிக மோசமாக உள்ளபோதும் அரசியல் களநிலவரம் தேர்தலையொட்டி மீண்டும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நோக்கியே திரும்பிச் சென்றுகொண்டிருப்பது நாட்டின் மீட்சிக்கான வழியாகத் தெரியவில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## புத்தாண்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கை கட்சிகளுக்கும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் வாய்ப்பாக அமைந்துவிடும். ஆகவே அதற்கு இடமளிக்காது செயற்படவேண்டும்.

கட்சி யாப்பு மீறப்பட்டு சில விடயங்கள் இடம்பெற்றது உண்மை. ஆனாலும் தற்போது கட்சி விவகாரம் நீதிமன்றத்தில் காணப்படுவதால் இதனை சுமூகமாக முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்பது தொடர்பாக பரவலாக பேசப்பட்டு வருகிறது. இது நடைமுறைச் சாத்தியமாகாத முடிவு என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பொது வேட்பாளரைத் தேடிப் பிடிபதற்குள்ளேயே முரண்பாடு பல வந்துசேரும். ஏற்கனவே நிலைமைகள் அப்படித் தான் இருக்கின்றன. இந்த அரசியல் சூழலில் பேரம் பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாங்கள் இருப்பது அவசியம். அந்தப் பலத்தோடு நாங்கள் பேரம் பேசலாம். ஒரு பொது வேட்பாளரை நிறுத்தினால் ஏனைய வேட்பாளர்களோடு நாங்கள் சமநிலையில் நிற்கிற பொழுது சில சமயங்களில் எங்களது பேரம் பேசும் பலம் குறைந்து போகலாம். அல்லது அவர்கள் எங்களுடு பேரம் பேசாமலும் போகலாம் - என்றார்.

## பண்டிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் 17 சதவீதமானோர் கண் பாதிப்புகளுக்கு ஆளாவதாகவும் தெரியவந்துள்ளது. எனவே எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களை மட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அதன்படி, பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்களை மட்டுப்படுத்துதல் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதி பாதுகாப்பு தேசிய சபை ஆகியன நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தன.

இதன்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் சஜித் ரணதுங்க, நேருக்கு நேராக முச்சக்கர வண்டிகள் மோதிக்கொள்வதால் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் கடுமையான விபத்துக்களில் சிக்கியவர்களில் பலர் இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துக்களிலேயே அதிகளவானோர் உயிரிழக்கின்றனர் என்று சுட்டிக்காட்டிய அவர், அதனால் நாளாந்தம் 10 பேர் வரையில் உயிரிழக்கின்றனர் எனவும், விபத்துக்களை மட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

அதனையடுத்து, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன, பண்டிகைக் காலத்தில் பேருந்துகளினால் ஏற்படும் விபத்துக்களை குறைப்பதற்கு பேருந்து உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதேபோல், போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் தொடர்பில் 1955 என்ற அவசர இலக்கத்திற்கு 24 மணித்தியாலங்களும் அறிவிக்க முடியும் என்பதோடு, கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக பதிலளிக்க அதிகாரிகள் தயாராக உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு உரையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் பிரியந்த சூரியபண்டார, பண்டிகைக் காலத்தில் இரண்டு 2 இலட்சம் பேர் அதிவேக வீதிகளை பயன்படுத்தக்கூடும் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும். அதனால் அதிவேக வீதிகளின் சகல காசாளர் நிலைய கதவுகளையும் திறந்து வைத்திருக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதிவேக வீதிகளில் ஏற்படும் விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையில் சோர்வடைந்த சாரதிகள் ஓய்வெடுப்பதற்கான இடம் புத்தாண்டுக்கு முன்னதாகத் திறக்கப்படும் என்பதோடு, பண்டிகைக் காலங்களில் ஏற்படக்கூடிய விபத்துகளை மட்டுப்படுத்த அனைத்துச் சாரதிகளும் வீதி விதிமுறைகளை பேண வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

அதிவேக வீதிப் பாதுகாப்பு நடவடிக்கை ஆலோசனைக் குழு உறுப்பினர் கலாநிதி சாமோத் ஹெட்டியாராச்சி, அதிவேக வீதிகளில் 56 சதவீதமானவை சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்படுகின்றன என்றார்.

அவற்றில் 35 சதவீதமான விபத்துக்களில் இறப்பு அல்லது முழுமையான முடக்கம் ஏற்படுகிறது. தெற்கு அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்டு, பதின்மூன்று வருடங்களில் 9,375 விபத்துகள் நடந்துள்ளன. அவற்றில் 5292 விபத்துகள் சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டவையாகும். இந்த விபத்துக்களில் 66 பேர் உயிரிழந்துள்ளனர். 637 பேர் முழுமையாக ஊனமுற்றுள்ளனர் - என்றார்.

கணக்கெடுப்பு மற்றும் மேற்பார்வை அறிக்கைகளில், அதிவேக வீதி விபத்துகளுக்கு சாரதிகளின் அலட்சியம், வாகனங்களை பராமரிக்காமை மற்றும் மூன்றாம் தரப்பினரால் விபத்துக்கள் ஏற்படுத்தப்படுதல் உள்ளிட்ட மூன்று முக்கிய விடயங்களே காரணங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

## 2500 ஆங்கில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும்.

ஆங்கில மொழியின் க.பொ.த (சா/த) பாடங்களை கற்பிப்பதற்காக தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கை 4,441 ஆக இருப்பினும், அதற்காக 6500 ஆசிரியர்களின் தேவை காணப்படுவதுடன், பெரும்பாலான பாடசாலைகளில் தற்போது சேவையில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக நடவடிக்கைகள் திட்டமிட்டு, ஆங்கில மொழி மூலமான கற்பித்தல்கள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளமை, 765 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆங்கில மொழி மூலமான பாடங்களை கற்பிக்கின்ற 765 பாடசாலைகளின் எண்ணிக்கையை, 2024 ஆம் ஆண்டில் 1,000 பாடசாலைகளாக அதிகரித்து ஆசிரியர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஆங்கில மொழி மூலமான பாடங்களை கற்பிக்கின்ற அனுமதியளிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையை 6,500 வரைக்கும் அதிகரிப்பதற்கும், அதற்காக ஆங்கில மொழி மூலமான பாடங்களைக் கற்பிக்கின்ற 2,500 ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர்; இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விலைகள் குறைந்துள்ளன அதுதான் உண்மை என்கிறார் பந்துல

ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் எரிவாயு, மின்சாரம், டொலர் என்பவற்றின் விலைகள் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளதாகவும், மரக்கறிகளின் விலையும் ஓரளவுக்கு குறைவடைந்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்காலத்தில் தம்புள்ளை, மீகொட, வெலிசறை, வெயங்கொடை ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் குறைவடைந்துள்ளன, 1 கிலோவை 200 ரூபாவுக்குக்கூட விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வருடம் புத்தாண்டை ஒவ்வொருவரும் அவரவருக்குரிய வகையில் கொண்டாடுகின்றனர், ஒரே நேரத்தில் புத்தாண்டு கொண்டாட்டம் இடம்பெறவில்லை - என்றார்.

# அரச தரப்பு வங்கிகளில் விரைவில் மறுசீரமைப்பு

### நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டன

அரச வங்கிகளில் மேற்கொள்ள வேண்டிய பல மறுசீரமைப்புகள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவினால் அடையாளங் காணப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கும் கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளாகவும், உலக வங்கியினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கொள்கை செயற்பாடுகளின் கீழான அடிப்படைச் செயற்பாடுகளாகவும் குறித்த மறுசீரமைப்புகளை துரிதமாக அமுல்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய குறித்த மறுசீரமைப்பு யோசனைகளை அமுல்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசுக்கு உரித்தான வங்கி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு ஆகிய துறைகளில் நிலவும் பலவீனங்கள் காரணமாக கடந்த காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலையில் குறித்த வங்கிகள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தன. அவ்வாறான சிரமங்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 779 கைதிகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமைவாக ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரகலய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய முடிந்துள்ளது. சர்வதேச நாயணநியதித்திடம் கடனைப் பெற்று உணவுப்பொருட்களை கூட நிறைவாக வழங்க முடியாத நிலைமை தான் உள்ளது.

தற்போது முழுநாட்டையும் விற்பனை செய்து நிதியீட்டும் செயற்பாட்டை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகின்றார். ஆகவே இதற்கு நாம் தொடர்ந்தும் இடமளிக்க முடியாது. மக்கள் பலத்தினால் மட்டும் தான் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். அதற்காக நாம் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் என்றார்.

அதேநேரம், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையையும், வேலைத்திட்டத்தினையும் சட்டமாக மாற்றப்போவதாக அறிவித்துள்ளார்.

நாட்டுமக்களுக்கு எதிராக ரணில் விக்கிமசிங்க முன்னெடுக்கின்ற வேலைத்திட்டத்துக்கு எதிராக மக்கள் பேரவை இயக்கம் என்ற வகையில் நாம் ஒன்றாக உள்ளோம்.

சட்டத்தால் அல்ல எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுங் கள் என்று நாம் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்றார்.

## மின்சார சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட இலங்கை மின்சார சபைத் திருத்தச் சட்டமூலத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை மையப்படுத்தி வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்தச் சட்டமூலம் 2023 டிசெம்பர் 9 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது.

வெளியிடப்பட்ட சட்டமூலத்தின் சிங்கள மொழி பிரதியில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது

## விடுமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மத்திய தபால் பரிவர்த்தனைக்கு இந்தப் புத்தாண்டுக் காலத்தில் அதிக எண்ணிக்கையிலான பொருட்கள் வந்தடைந்துள்ளன. வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அதிக அளவில் பொருட்களை அனுப்பியுள்ளனர். புத்தாண்டு காலம் என்பதால் அந்த பொருட்களை துரிதமாக விநியோக்க வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது.

இதன்போது நெருக்கடிகள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் ஏப்ரல் 12ஆம் திகதி பொது விடுமுறையாக இருந்தாலும் அன்றைய தினம் சேவைக்கு சமூகமளிக்க தபால் மா அதிபர் மற்றும் தபால் தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். சுங்கத் திணைக்கள் அதிகாரிகளும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக மக்கள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டனர். எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நின்றனர். ஆனால் இம்முறை புத்தாண்டுக்குள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்காமல் ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை வாங்க மக்கள் திரள்வதை காணமுடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் பலனாகவே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் சரியான வழிக்காட்டலின் கீழ் கிடைத்த வெற்றியின் பலனை மக்கள் அனுபவிக்கின்றனர். புத்தாண்டுக் காலத்தில் உணவு பொருட்களின் விலை இரட்டிப்பாகி உள்ளதென பலரும் சாடினாலும், 2022ஃ2023 ஆண்டுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது உண்மை புரியும். எனவே நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பணப்புழக்கம் சாராமல் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட 1.5 பில்லியன் டொலர்களுடன் வெளிநாட்டுக் கையிருப்பு 4.9 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ள நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் 5 பில்லியன் டொலர்களைக் கடந்துவிடும் என நம்புகிறோம்.

தற்போது தேர்தல் மனப்பான்மை எங்களிடம் இல்லை. தற்போதைய பொருளாதார வேலைத் திட்டத்தை தொடர விரும்புகிறோம். சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது தேர்தல்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# டக்ளஸின் அடாவடி, சண்டித்தன அரசியல் தமிழர்களிடம் என்றும் செல்லுபடியாகாது

## முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன் காட்டம்




டக்ளஸ் தேவானந்தாவின் அடாவடி மற்றும் சண்டித்தன அரசியல் தமிழ் மக்களிடம் செல்லுபடியாகாது என முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மக்களின் நியாயமான போராட்டத்தை முறியடிக்க 06 பஸ்களில் மக்கள் அழைத்துவரப்பட்டனர்.

மேற்படி விடயம் தொடர்பாக ஊடக சந்திப்பொன்றை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜா ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு -

முதலில் நாம் 06 பஸ்களில் வந்திருந்த மக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் தமிழ் மக்கள் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு காசு ஒரு ஆளுக்கு ஆயிரம் ரூபா தருவதாகவும், அட்டை பண்ணைக்கான அனுமதிபத்திரம் தருவதாகவும் பல பொய்களை கூறி பொன்னாவெளி கிராம மக்களின் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கிலேயே அழைத்து வரப்பட்டனர்.

இருப்பினும் 06 பஸ்களில் வந்திருந்த வேறு பிரதேச மக்கள் பொன்னாவெளி கிராமத்தில் இடம்பெறும் போராட்டத்தின் உண்மை நிலையை அறிந்து போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதற்கு அவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அதேபோல் ஜெயபுரம் மற்றும் முழங்காவில் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொன்னாவெளி மக்களுக்காக தமது நேர்மையான செயற்பாட்டை செய்திருந்தனர் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் வடக்கில் நம்பி ஒரு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சரின் அடாவடித்தனமான செயலாக இச் செயல் அமைந்துள்ளது. மீண்டும் பல விசேட பாதுகாப்புகளுடன் பொன்னாவெளி கிராமத்திற்கு செல்ல உள்ளதாகவும் மக்களின் உரிமைபோராட்டத்தை அடக்கு முறை மூலம் நடத்திச்செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது இவ்வாறான செயல் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே பாதிக்கும். வடக்கில் கடல் தொழில் அமைச்சரால் வாக்கு எண்ணிக்கை வீழ்ச்சியடையும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேலும், இவ்வாறான செயற்பாடுகளைப் பார்க்கும் போது இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலா என்றும் எண்ணத் தோன்றுகிறது எனவும் கருத்து வெளியிட்டிருந்தார். (05)

# நல்லூரில் வாழும் பழங்குடி மக்களின் பிரச்சினைகளை ஆராய விசேட குழு

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லூரில் வாழும் பழங்குடியின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்க திருகோணமலை அரசாங்க அதிபருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில் திருகோ ணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நல்லூரில் தங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து கிழக்கு ஆளுநரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து நல்லூர் பிரதேசத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, வெளிஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்ததுடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்பின் அவர்களின் பிரச்சினைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.(05)



# கல்முனை பிரதேச செயலாளருக்கு சேவைப் பாராட்டும், கௌரவிப்பும்



கல்முனை பிரதேச செயலாளராக கடந்த 01-03-2021 அன்று கடமையேற்று இன்று வரை தொடர்ந்து பல சேவைகளை ஆற்றிக்கொண்டிருக்கும் மருதமுனையை சேர்ந்த ஜே. லியாகத் அலியின் காத்திரமானதும், துணிகரமானதுமான சேவையைப் பாராட்டி கல்முனை மக்களால் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஆஷாத் ப்ளாஸா வரவேற்பு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கல்முனையன்ஸ் போரத்தின் வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வின் போது இக்கௌரவம் பிரதேச செயலாளருக்கு வழங்கிவைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை பிரதம பொறியியலாளர் ஜௌஸி அப்துல் ஜப்பார், உதவி திட்டமிடல் பணிப்பாளரும், கல்முனையன்ஸ் போரத்தின் கணக்காய்வாளருமான ஏ. எல். மஜீட், போரத்தின் சிரேஷ்ட செயற்பாட்டாளர் ஜலீல் சுலைமான், போரத்தின் நிருவாக பணிப்பாளர் எம். எம். காமில் மற்றும் போரத்தின் நிறைவேற்று பணிப்பாளர் முபாரிஸ் எம். ஹனீபா ஆகியோரால் பிரதேச செயலாளருக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டிக் கௌரவம் வழங்கப்பட்டது.

மேலும் கல்முனையின் முதுசம் முன்னாள் ஜித்தாவிற்கான தூதுவரும், முன்னாள் வக்பு சபை உறுப்பினருமான டாக்டர் ஏ. உதுமாலெப்பை, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், கல்முனை நகர ஜூம்ஆப் பள்ளிவாசல் தலைவருமான அப்துல் ரஸாக் ஜவாத், சிரேஷ்ட சட்டத்தரணி யூ. எம். நிஷார், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எம். எச். தௌபீக், ஜம்இய்யத்துல் உலமா கல்முனைக் கிளை தலைவர் மௌலவி ஏ. எல். முர்ஷித் ஆகியோரால் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (05)

# புழுதியாறு ஏற்று நீர்பாசனத் திட்ட சீரமைப்பு பற்றி கலந்துரையாடல்





கிளிநொச்சி மாவட்டத்தின் மாயவனூர் புழுதியாறு குள ஏற்று நீர் பாசனத்திட்ட புனரமைப்பு தொடர்பான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல் திங்கட்கிழமை நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் குறித்த திட்ட புனரமைப்புக்கான அனுமதியை வடக்கு மாகாண சபையிடம் பெறுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், குறித்த பகுதியில் பயிர் செய்கை தொடர்பியில் ஆய்வொன்றை மேற்கொள்வதுடன், இப்பகுதி விவசாயிகளுடன் குறித்த பகுதியில் சந்திபொன்றை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்பாசன பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், நீர்பாசன பொறியியலாளர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர், மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 113)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவதானம் அவசியம்

தேர்தலில்போட்டியிடும்வேட்பாளர்களுக்கானபிணை வைப்புத் தொகையை திருத்தம் செய்வதற்கு ஆளும் தரப்பு முடிவு செய்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையும் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் சட்டம், நாடாளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தற்போதுள்ள பிணை வைப்பு பணத்தொகையை காலத்திற்கேற்ற வகையில் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பின்னணிக்கு ஏற்ப இற்றைப்படுத்துதல் பொருத்தமானது என அடையாளங் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகை 2.6 மில்லியன் வரையும், சுயேச்சை வேட்பாளரின் பிணை வைப்புத்தொகை 3.1 மில்லியன் வரையும் அதிகரிக்கப்படவுள்ளது.

1981ஆம்ஆண்டின்முதலாம்இலக்கநாடாளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகையை 11,000 ரூபா வரையும், சுயேச்சை குழுவின் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்பை 16,000 ரூபா வரையும் அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகையை 6,000 ரூபா வரையும் சுயேட்சைக்குழு வேட்பாளர் ஒருவரின் பிணை வைப்புத்தொகையை 11,000 ரூபா வரையும் அதிகரிக்கவுள்ளது.

அளவுக்கு அதிகமானவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடுக்கவும். வாக்குச் சிதறல்களை நிறுத்தவும் தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் இதுபோன்ற நடவடிக்கைகள் உதவக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு தேர்தலிலும் பலர் போட்டியிடுகின்றபோது வாக்குச் சீட்டுக்களின் நீளம் அதிகரிப்பதுடன் அதனைத் தயாரிப்பதற்கான செலவுகளும் அதிகரிக்கின்றன. அது மட்டுமல்ல வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அவர்களால்தேர்தலுக்காகச்செலவிடப்படும்தெகையும் அதிகரிக்கின்றது, இதனால் நிதி விரயம் ஏற்படுகின்றது.

இவையெல்லாம் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் செலுத்தவேண்டியபிணைப்பணத்திற்கானதொகையின் அதிகரிப்பை நியாயப்படுத்தினாலும், ஒரு வகையில் இந்த உயர்வு மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதற்கான ஒரு வழிதான் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாட்டின்அனைத்துமக்களுக்கும்தேர்தலில்போட்டியிடும் உரிமை இருக்கின்றபோதும், அதற்கான பிணைத் தொகையை உயர்த்துவதன் மூலம் பணமற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன.

தேர்தலில் போட்டியிடுவதற்கு பெரும் தொகைப் பணத்தைச் செலவிடக்கூடியவர்கள் மட்டுமே தேர்தல் களம் காணும் நிலையை இது ஏற்படுத்துகின்றது. அதன் மூலம் அனைவரும் போட்டியிட முடியும் என்கிற நிலைக்கு மறைமுகமாகக் கழவாளம் இடப்படுகின்றது. போட்டியைக் குறைப்பதற்கும் தெரிவுகளை மட்டுப்படுத்துவதற்குமாக அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டியது அவசியம்.

# கோடையில் அதிக பழங்கள் சாப்பிடவேண்டியது ஏன்?

**கு.கணேசன்**

இயற்கையின் பின்னணியில் நம் ஆரோக்கியத்துக்குப் பாதுகாப்பு தருவது, காய் - கனிகளே! அதிலும், நாவுக்கு ருசியையும், உடலுக்குச் சத்துகளையும் தாராளமாகத் தருவது இயற்கையாக விளையும் பழங்களே! ஆனால், 'நாகரிக உணவுக் கலாச்சாரம்' எனும் பெயரில் இயற்கை உணவுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, செயற்கை உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நம் உடலை நாமே கெடுத்துக்கொள்கிறோம்.

### முக்கனிகளை மறந்த தலைமுறை



மா, பலா, வாழை என முக்கனியைப் போற்றிக் கொண்டாடிய தமிழர் வாழ்வில்தான் பழங்களைச் சாப்பிடுவதையே குறைத்துக்கொண்ட தலைமுறையையும் காண்கிறோம். அதிலும் குறிப்பாக, இன்றைய இளைய சமுதாயம் கோடையில் மென்பானங்களை அருந்துவதற்குத் தருகிற முக்கியத்துவத்தைப் பழங்களைச் சாப்பிடுவதற்குத் தருவதில்லை என்பது கவலைக்குரிய செய்தி.

### தோல் தரும் பாதுகாப்பு

உடலை ஒரு போர்வைபோல் போர்த்திப் பாதுகாக்கின்ற தோல்தான் உடலிலேயே மிகப் பெரிய உறுப்பு. நம் மொத்த உடல் எடையில் 12இல் ஒரு பங்கு தோலின் எடை. இதில் மூன்றில் இரண்டுபங்கு தண்ணீர்தான் இருக்கிறது. தோலுக்கு அழகூட்டுவதும் பாதுகாப்பு தருவதும் தண்ணீர்தான்.

உடலின் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதில் தோலுக்குப் பங்கு இருக்கிறதென்றால், வியர்வை மூலம் அந்த வெப்பத்தைத் தணிப்பதற்கு உதவுவது இந்தத் தண்ணீர்ச் சத்துதான். உடலில் தண்ணீரின் அளவு எப்போதும் சரியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் உடலில் உள்ள நீர்ச்சத்தும் உப்புகளும் குறைந்துவிடும். அப்போது பலவழிகளில் ஆரோக்கியம் கெடும்.

### கோடையின் கொடுமை

கோடையில் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க வியர்வையின் அளவும் அதிகரிப்பதால், உடலில் நீரிழப்பு (Dehydration) ஏற்படுகிறது. வியர்வை வழியாக சோடியம், பொட்டாசியம், மெக்னீசியம், யூரியா எனப் பல உப்புகள் அளவுக்கு அதிகமாக வெளியேறிவிடுவதால், குருதி ஓட்டமும் குருதி அழுத்தமும் குறைகின்றன' சிறுநீர் கழிவது குறைகிறது. அடர் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் போகிறது. தண்ணீர்த் தாகம் அதிகரிக்கிறது.



வாய் உலர்ந்துபோகிறது. தலைவலி, கிறுகிறுப்பு ஏற்படுகின்றன. தசைகள் சோர்வடைகின்றன. உடல் உற்சாகத்தை இழக்கிறது. தெளிவில்லாத மனநிலை ஏற்படுகிறது. செய்யும் வேலையில் தொய்வு உண்டாகிறது. தோல் வறட்சி, வெப்பத் தளர்ச்சி, வெப்பமயக்கம், வெப்பவாதம் போன்றவை தொல்லை தருகின்றன.

இந்த நீரிழப்பை ஈடுகட்டப் போதுமான அளவுக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும். பொதுவாக ஒருவருக்கு நாளொன்றுக்குத் தேவையான தண்ணீரின் அளவு மூன்று லீற்றர். இதையே கோடைக்காலத்தில் இரண்டு மடங்காகக் குடிக்கவேண்டும். எவ்வளவுதான் தண்ணீரைக் குடிப்பது என்று அலுத்துக்கொள்கிறவர்களும், சுத்தமான குடிதண்ணீருக்குச் சிரமப்படுபவர்களும் தண்ணீர்ச் சத்து மிகுந்த பழங்களை அதிகம் சாப்பிடவேண்டும். இப்படிப் பழங்களை அதிகமாகச் சாப்பிடும்போது நீர்ச்சத்துடன் பல வைட்டமின்களும் தாது உப்புகளும் அதிக அளவில் கிடைப்பதால் உடலில் ஏற்படும் பல வெப்பப் பிரச்சினைகள் உடனுக்குடன் சரியாகின்றன.

### கொடை வள்ளல் தர்பூசணி



வெயில் காலத்துக்கு ஏற்ற பழங்களில் முதலிடம் வகிப்பது, தர்பூசணி. இதில் விற்றமின் '-ஏ', விற்றமின் '-சி', சோடியம், பொட்டாசியம், கால்சியம், மெக்னீசியம் என்று பல சத்துகள் காணப்பட்டாலும் இதில் 90% தண்ணீர்ச் சத்துதான் இருக்கிறது. கோடையில் உடலில் ஏற்படும் நீரிழப்பைச் சரிசெய்து நீர்ச்சத்தை சமநிலைப்படுத்துவதும் தாகத்தை உடனடியாகத் தணிப்பதில் முன்னிலை வகிப்பதும் இதுவே. எந்த வயதினரும் இதைச் சாப்பிடலாம் என்பது ஒரு கூடுதல் நன்மை.

கோடையில்தினமும்தர்பூசணியைச்சாப்பிடுவதன் மூலம் உடலின் ஆற்றல் 25% அதிகரிக்கிறது. உடலின் வெப்பநிலை குறைகிறது, ரத்த அழுத்தம் கட்டுப்படுகிறது. தர்பூசணியில் உள்ள 'ஃபைட்டோ நியூட்ரியன்ட்ஸ்' எனப்படும் இயற்கைச் சத்துகள் நரம்புகளுக்குக் கூடுதல் சக்தியைத் தருகின்றன. இதனால் உடல் சுறுசுறுப்பாக இயங்குகிறது.

### வெப்பத்தை விரட்டும் வெள்ளரி



வெயிலின் கொடுமையிலிருந்து நம்மைக் காக்க வந்த இயற்கை வரப்பிரசாதம், வெள்ளரி. இதன் முக்கியப் பயனே உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதுதான். அதிக அளவு நீர்ச்சத்தும் குறைந்த கலோரிகளும் கொண்ட வெள்ளரி உடலில் நீரிழப்பால் ஏற்படுகிற சிறுநீர்க் கடுப்பைக் குறைக்கிறது. வெயில் காலத்தில் அதிகப்படுகிற சிறுநீர்க் கல் கரையவும் உதவுகிறது.

பிஞ்சு வெள்ளரிக் காயில் உப்பும், மிளகாய்த் தூளும் கலந்து சாப்பிடும் பழக்கம் பலருக்கு உண்டு. இந்த உப்பில் உள்ள சோடியம் தாது வியர்வையில் இழக்கும் சோடியத்தை ஈடுகட்ட உதவுகிறது. மேலும் வெள்ளரிக்காயுடன் தக்காளி சேர்த்து சுவையான 'சாலட்' ஆக செய்து வைத்தால் குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள். இனிப்புச் சுவையை விரும்புபவர்கள் வெள்ளரிப் பழத்தைச் சாப்பிடலாம்.

வெயிலில் அதிக நேரம் அலைபவர்களுக்குக் கண்களில் எரிச்சல் ஏற்படும். இந்த எரிச்சலைப் போக்க, வெள்ளரித் துண்டுகளைக் கண் இமைகளின் மீது சிறிது நேரம் வைத்திருந்தால் கண் அயற்சி நீங்கி புத்துணர்வு ஏற்படும்.

### சிட்ரஸ் பழங்கள்



திராட்சை, சாத்துக்குடி ஒரேஞ், எலுமிச்சை, நெல்லிக்காய் போன்றவற்றை சிட்ரஸ் பழங்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கோடையில் அதிக பழங்கள் சாப்பிடவேண்டியது ஏன்?

4ம் பக்க தொடர்ச்சி...........



என்கிறோம். இவற்றில் விற்றமின் ’-சி’ சத்து அதிகமாக இருப்பதே இப்படி அழைப்பதற்குக் காரணம். இந்தச் சத்து உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. கோடையில் முதியவர்களும் குழந்தைகளும் அதிக நேரம் வெயிலில் அலைந்தால் மயக்கம் அடைவது வழக்கம். இவர்களுக்குப் பொதுவாகவே நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதும் இதற்கு ஒரு காரணம்தான்.

எனவே, இந்த வயதுள்ளவர்கள் தினமும் நெல்லிக்காய், திராட்சை அல்லது ஒரேஞ் சாப்பிட்டுவந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். எலுமிச்சை நன்னாரி கலந்த சர்பத் அருந்திவந்தால் உடல் குளிர்ச்சி அடையும். சிறுநீர் அதிகமாகப் போகும். இவற்றில் உள்ள குளுக்கோஸ் உடனடியாகக் குருதியில் கலந்துவிடும் என்பதால் விரைவிலேயே உடல் சோர்வு மறைந்து புத்துணர்வு கிடைக்கும்.

## பழங்கள் தரும் பொதுவான பலன்கள்

பழங்கள் கோடைக் காலத்தில் மட்டுமல்ல எல்லாப் பருவத்திலும் நமக்கு நன்மை செய்கின்றன. நம் உடலுக்குத் தேவைப்படுகின்ற பலவித சத்துகளைக் குறைந்த செலவில் அள்ளித்தருவதுபழங்களே. பழங்களில்நார்ச்சத்துஅதிகமாகவும், கொழுப்புச் சத்து குறைவாகவும் உள்ளது. இதனால், உடல் பருமன் தடுக்கப்படும்; செரிமானக் குறைபாடு, மலச்சிக்கல் போன்ற பிரச்சினைகள் ஏற்படாது.

பப்பாளி, கொய்யா, பலாப்பழம், ஒரேஞ், எலுமிச்சை, நெல்லி போன்றவற்றில் உள்ள வைட்டமின்- சி சத்து சளித் தொல்லையிலிருந்தும் விடுவிக்கிறது. எலும்பு மூட்டுகளில் ‘கொலாஜன்’ என்ற புரத உற்பத்திக்கு உதவுகிறது. இதனால் மூட்டுவலிதடுக்கப்படுகிறது. நாவல்பழத்தில்உள்ள‘ஜம்போலின்’ எனும் குளுக்கோசைடு குருதிச் சர்க்கரையைக் குறைத்து நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. பேரீச்சம்பழத்தில் உள்ள இரும்புச் சத்து குருதிச்சோகையைக் குணப்படுத்துகிறது.

வாழைப்பழம், கிர்ணிப்பழம், சாத்துக்குடி போன்றவற்றில் உள்ள பொட்டாசியம் குருதி அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்கிறது. பப்பாளி மற்றும் மாம்பழத்தில் உள்ள பீட்டா கரோட்டீன் கண் பார்வையைப் பாதுகாக்கிறது. மாலைக் கண் நோயைச் சரி செய்கிறது. பல்வேறு பழங்களில் உள்ள ‘ஆன்டி ஆக்சிடன்ட்’கள் (Anti-oxidants) புற்றுநோய் வருவதைத் தடுக்கின்றன. அதேசமயம் பழங்களை மட்டுமே உணவாகக் கொள்வதும் கூடாது. கொழுப்புக் கல்லீரல் (Fatty liver) பிரச்சினை உண்டாக வாய்ப்பு உண்டு.

எனவே, கோடையில் ஒரு நாளைக்கு 350 கிராம் வரை பழங்களைச் சாப்பிடுவது நல்லது. மற்றக் காலங்களில் தினமும் 250 கிராம் போதும். கோடையில் நீரிழிவு நோயாளிகள் தினமும் அதிகபட்சம் 200 கிராம் பழங்கள் சாப்பிடலாம். மற்றக் காலங்களில் 100 கிராம் போதும்.

## சாப்பாட்டுக்கு முன்பா? பின்பா?

உணவோடு பழங்களைச் சேர்த்துக்கொள்வதே நம்மில் பலருக்குப் பழக்கம். ஆனால், பழங்களைத் தனி உணவாகக் கருத வேண்டும் என்கிறது நவீன மருத்துவம். பழங்களை உணவுக்குச் சற்று முன்பு அல்லது உணவைச் சாப்பிட்டவுடன் சாப்பிடுவதைவிட, தனித்து அதை ஒரு உணவாகக் கருதிச் சாப்பிடுவதே சிறந்த முறை. அப்போதுதான் உணவுச் செரிமானத்தில் பிரச்சினை வராது.

இதற்கு ஒரு உதாரணம்... உணவு சாப்பிட்டதும் பழம் சாப்பிட்டால், ஏற்கெனவே இரைப்பையில் இருக்கும் உணவு செரிமானம் ஆவதற்காகக் காத்திருக்காமல், முன்கூட்டியே இது செரிமானமாகிவிடும். அதற்குப் பிறகுதான் உணவில் உள்ள மற்ற சத்துகள் கிரகிக்கப்படும்.

இதனால்சிலருக்கு-குறிப்பாகஅல்சர்உள்ளவர்களுக்கு - ஏப்பம், வயிறு உப்புதல் போன்ற தொல்லைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உணவு சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்துப் பழம் சாப்பிட்டால் இது தவிர்க்கப்படும்.

## பழச்சாறு வேண்டாம்! முழுப் பழம் நல்லது

பொதுவாகவே பழங்களைச் சாப்பிடத் தொடங்கும்போது நாம் முதலில் செய்யும் வேலை, பழத்தின் தோலை நீக்குவதுதான். தோல் என்றாலே தேவையற்றது என்று நம் மனதில் பதிந்துபோனதன் விளைவு இது.

பல பழங்களில் அவற்றின் உட்பகுதியைவிட தோலில்தான் அதிக சத்துகள் இருக்கும். குறிப்பாக, கிவி, மாம்பழம், திராட்சை, கொய்யா, ஆப்பிள், சாத்துக்குடி போன்ற பழங்களின் தோலில் அதிக நார்ச்சத்து இருக்கிறது. இவற்றைத் தோலோடு சாப்பிடுவதுதான் நல்லது.

பழங்களைப்பிழிந்து, வடிகட்டி, சாறைமட்டும்குடிக்கும்போது நார்ச்சத்தை இழந்திருக்கும். தவிர, பழங்களைச் சாறாக்கி, பால், சர்க்கரை, குளுக்கோஸ் சேர்த்துக் குடிக்கும்போது, அதில் சேர்க்கப்படும் சர்க்கரையும் பாலும் பழத்தில் இருக்கின்ற சத்துகளின் இயல்பையே குலைத்துவிடும். செரிமானக் கோளாறையும் ஏற்படுத்திவிடும். எனவே, பழச்சாறுகளுக்குப் பதிலாக முழுப் பழங்களாக எடுத்துக்கொள்வதுதான் நல்லது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பண்டிகைகளை முன்னிட்டு கடற்கரைகள் சுத்திகரிப்பு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித றமழான் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகை என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகள் விசேடமாக சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் ஆலோசனை,வழிகாட்டலின்கீழ்மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர்எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில்திண்மக்கழிவகற்றல் மற்றும் வேலைத் தொழிலாளர்கள் இணைந்து திங்கட்கிழமை முதல் இச்சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுத்துள்ளனர்.



இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. (05)

# புது வருடத்தை முன்னிட்டு வவுனியாவில் வியாபார நிலையங்களில் திடீர் சோதனை

## 90 ஆயிரம் ரூபாய் அபராதம்; ஒருவருக்கு பிடியாணை



புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.



தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியா நகரப்பகுதி, வைரவபுளியங்குளம், குருமன்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், உணவகங்கள் உள்ளிட்டவற்றில் சுகாதார பரிசோதகர்களால் திங்கட்கிழமை சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கடந்த சிலநாள்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையை அடிப்படையாக கொண்டு பழுதடைந்த பொருள்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, விலைகள் பொறிக்கப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 8 பேருக்கு எதிராக முதல் கட்டமாக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், அதில் 6



பேருக்கு 90 ஆயிரம் ரூபா அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும்மொரு வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு மக்களுக்கு பாதுகாப்பானதும், சுகாதாரமானதுமானபொருள்களை வழங்கும் பொருட்டு சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (05 - 100)



காலைக்கதிர் Kalaikkathir

## விடுமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் பொறுப்பாகும். தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அதற்கு முகம்கொடுக்க தயாராக இருக்கிறோம். தற்போது பொருளாதாரத்தை பலப்படுத்துவது குறித்தே கவனம் செலுத்துகிறோம் - என்றார்.

## சஜித் வரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும் எனவும் சிலர் தெரிவித்து வருகின்றனர். ஆனால் ஜனாதிபதி தேர்தலும் பொதுத் தேர்தலுக்கும் ஒரே நேரத்தில் இடம்பெறாது.

அவ்வாறு நடத்தவும் முடியாது. அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டம்பர், ஒக்டோபர் காலத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவேண்டும். பொதுத் தேர்தலுக்கு செல்ல இன்னும் காலம் இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவது நிச்சயமாகும். என்றாலும் அவர் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் யானை சின்னத்தில் அல்லாமல் வேறு ஒரு சின்னத்திலேயே போட்டியிடுவார். தேர்தலுக்காக கூட்டணி அமைக்கும் நடவடிக்கையின் அடித்தள நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது.

அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொள்வதே எமது நோக்கம். பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த 80 வீதமானவர்களின் ஆதரவு ரணில் விக்ரமசிங்கவுக்கு இருக்கிறது என அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கிறார்.

அதேபோன்று ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமான, சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றவரான ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதே எமது இலக்கு. அதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இன்னும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வர இருக்கின்றனர்.

சஜித் பிரேமதாசவும் மீண்டும் எம்முடன் இணைந்துகொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என்றே நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். சஜித் பிரேமதாச ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து பயணிக்க முன்வருவாராக இருந்தால் அதனை நாங்கள் மிகவும் அன்புடன் வரவேற்க தயாராக இருக்கிறோம்.

அதேநேரம் சஜித் பிரேமதாச எம்முடன் இணையாவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் எமது நண்பர்கள் பலர் ஜனாதிபதியுடன் இணைந்துகொள்வார்கள். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதனை கண்டுகொள்ளலாம் என்றார்.

# தமிழர் தரப்பு பொதுவேட்பாளரை அடையாளம் காணமுன் தமிழர் அரசியல் அபிலாசைகள் என்ன என தீர்மானிக்குக

## மனோ கணேசன் எம்.பி. கூறுகிறார்



கடந்த காலங்களில் தமிழ் மக்கள், குறிப்பாக வடக்கு கிழக்கு ஈழத்தமிழ் உடன்பிறப்புகள், தென்னிலங்கை தமிழ் வேட்பாளர்களுக்கு தாராளமாக வாக்களித்தார்கள். ஒருமுறை தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள். இந்த இரண்டு செயன்முறைகளும் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டை தராத காரணத்தால்தான், இன்று பொது தமிழ் வேட்பாளர் என்ற யோசனை முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்படுகிறது. இதன் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்புகளில் கவனமாக ஆராய வேண்டும்.

இவ்விதமாக தமிழ் பொது வேட்பாளர் போட்டி இடுவார் எனில் அவருக்கு தமிழ் வாக்காளர்கள், குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் வாக்காளர்கள் ஒட்டுமொத்தமாக வாக்களிப்பார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். அடுத்தது, இதன் மூலமாக முழு உலகிற்கும் இலங்கைத் தமிழர்கள் சார்பில் என்ன சொல்லப்பட உள்ளது என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். பொது தமிழ் அரசியல் அபிலாஷைகள் என்ன? குறிப்பாக, அது பதின்மூன்றின் முழுமையான அமுலாக்கமா? பதின்மூன்று 'ப்ளசா'? சமஷ்டியா? வடக்;கு கிழக்கு இணைப்பா? இவை குறித்து முதலில் பொது முடிவுக்கு, தமிழ் கட்சிகள் வர வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் எம்.பி. இதுபற்றி இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கூறியவை வருமாறு -

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் சில கட்சிகள், நேற்று, ஜனாதிபதி தேர்தலை பகிஸ்கரிக்க வேண்டும் எனக் கோருகின்றன. அவற்றின் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்பில் பல்வேறு கருத்தோட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இத்தகைய கருத்துகளை முன்வைக்க, அந்த கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது.

ஆனால், பகிஸ்காரம் வேண்டாம். பொது தமிழ் வேட்பாளர் வேண்டும் என்று சொல்பவர்கள், அதன்மூலம் உலகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதை தீர்மானிக்க வேண்டும். குறைந்த பட்ச அல்லது அதிக பட்ச கோரிக்கைகள், நிலைபாடுகள், அபிலாசைகள் என்ன? என்பவை பற்றி உரையாட வேண்டும்.

இன்னமும் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அதற்கிடையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்ற தேர்தலும் நடைபெறலாம். மறுபுறம், தேர்தகள் ஆணையாளர் என்ன சொன்னாலும் கூட, ஜனாதிபதி தேர்தலும், நாடாளுமன்ற தேர்தலும் ஒருசேர நடந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. ஆகவே இவை அனைத்தையும் கணக்கிலெடுக்க வேண்டும்.

இதற்கிடையில் எனது பெயரும் பொது தமிழ் வேட்பாளர் பரிசீலனையில் முன்மொழியப்பட்டு உள்ளது. பொது அரசியல் பரப்பில் நாடறிந்த தமிழ் கட்சித் தலைவராக நான் இருக்கின்ற காரணத்தால் இப்படியான ஒரு யோசனை சொல்லப்படுகிறது. இதை சொல்ல எவருக்கும் உரிமை உண்டு. இதுபற்றி நானும், எனது கட்சியும்தான் தீர்மானிக்க வேண்டும். ஆகவே, இதுபற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளத் தேவை இல்லை. இங்கே பொது தமிழ் வேட்பாளரை அடையாளம் காணுமுன், பொது தமிழ் அரசியல் அபிலாசைகள் என்ன எனத் தீர்மானிக்க வேண்டும் என்பதுதான் பிரதானமான தேவைப்பாடாகும். - என்றார்.(05)

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில், மின்சார சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மின்சார சபைக்கு நட்டம் ஏற்படும்போது அந்த நட்டத்தை பொதுமக்களே சுமக்க வேண்டியிருக்கிறது, தொடர்ந்து நட்டம் ஏற்படுமாயின் அதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கைக்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து, நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை வழங்கியுள்ளன.

பழைய கருத்துருக்கள் தவிர்த்து, நாட்டின் கடனில் இருந்து விடுபட மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். அதனை மேற்கொள்ளாவிடின் நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதை தவிர்க்க முடியாது என்றார்.

## இன்று ரமழான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணித்தியாலங்கள் சென்ற நிலையில் மிக நீண்ட ஆலோசனை மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர் பிறைக் குழுவினால் ஏகமனதாக குறித்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைப்பிறை தீர்மானிக்கும் இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு உறுப்பினர்கள், பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், இலங்கை வக்புசபை, முஸ்லிம் சமய கலாச்சார திணைக்கள அதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் பிறைக் குழு உறுப்பினர்கள், மேமன், ஹனபி பள்ளிவாசல் பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## அங்கவீனமுற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கவீனமுற்ற தரைப்படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 17 மில்லியன் ரூபா செலவில் 50 மின்சார மோட்டார் சைக்கிள்கள் நிகழ்வில் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்திற்கு வருகைத் தந்த ஜனாதிபதிக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குனரத்னவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் அடையாள அம்சமாக அங்கவீனமுற்ற படையினர் சிலருக்கு ஜனாதிபதியால் மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு படையினருக்கு மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்த முடியுமென இராணுவச் சேவை அதிகாரசபை நம்பிக்கை தெரிவித்தது.

நிகழ்வில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அங்கவீனமுற்ற படையினருக்கு மேலும் 76 மின்சார மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கப்படும். மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு படையினரின் நலனுக்காக உயர்வான அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது - என்றார்.

மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வின் நிறைவில் அங்கவீனமுற்ற படையினருடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# யாழ். மண்ணில் புகழ்பெற்ற ஆங்கிலப் பேராசியர் கெனடி நினைவாக மாணவர்களுக்கு கௌரவம்!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆங்கில அறிவை யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேசத்தில் பிரபலப்படுத்தும் நோக்கில் மறைந்த யாழ் மண்ணின் புகழ்பெற்ற ஆங்கில பேராசிரியர் கெனடி விஜயரட்ணம் நினைவாக ஆங்கில பாடத்தில் சிறப்பான பெறுபேறு களைப் பெற்ற காரைநகர் பிரதேச மாணவர்கள் அண்மையில் அன்னாரின் குடும்பத்தினரால் பணப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆங்கில ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கெனடியின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.(05)

# மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் சாவு

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற விபத்தில் மன்னாரில் உண வகத்தில் பணியாற்றிவந்த 22 வயதான இளைஞன் பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஹற்றன் பகுதியை சேர்ந்த (சந்துரு) சந்திரகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் தொழில் நிமித்தம் உணவகங்களில் தொழிலாளியாகப் பணிபுரிந்து வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்று சிகிச்சைக்காக மன்னார்வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்ட நிலையில் இளைஞன் பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழில் ஓட்டோ திருடியவர் சைக்கிளில் தப்பியோட்டம்

யாழ்ப்பாணத்தில் ஓட்டோவைத் திருடிச் சென்றவரை பொலிஸார் மடக்கிப்பிடிக்கமுற்பட்டவேளை, சந்தேக நபர் வீதியில் சென்ற மாணவனின் சைக்கிளை பறித்துக்கொண்டு, அதில் தப்பி சென்றுள்ளார்.

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அருகில் தனது ஓட்டோவை நிறுத்தி விட்டு , மருத்துவ மனைக்கு சென்று திரும்பிய வேளை தனது ஓட்டோ களவாடப்பட்டதை அறிந்து அது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்கப்பட்டது.

களவாடப்பட்டஓட்டோயாழ்ப்பாணம் -காங்கேசன்துறை வீதியில் இணுவில் மத்தியகல்லூரிக்கு முன்பாக பயணித்த போது , அதனை அப்பகுதியில் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் கண்ணுற்று , ஓட்டோவை வழிமறித்துள்ளனர்.

அவ்வேளை ஓட்டோவைத் திருடிக்கொண்டு சென்றவர் , அதனை வீதியில்கைவிட்டு, தப்பியோடி, வீதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த மாணவனின் சைக்கிளைப் பறித்துக் கொண்டு அதில் தப்பியோடியுள்ளார்.

ஓட்டோவை மீட்ட பொலிஸார் , தப்பி சென்றவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். மாணவனிடமும் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலத்தை பொலிஸார் பெற்றுள்ளனர். (05)

# செவ்வானம் விளையாட்டுக்கழகம் வவுனியா மாவட்டத்தில் சம்பியன்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

ரொக்கெட் கிறிக்கட் சுற்றுப் போட்டியின்இறுதிபோட்டியில்வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம்

பலம்பொருந்திய இளையதாரகை அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திசம்பியன்பட்டத்தைசுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டியில் இளைய தாரகை விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன்,சிறப்பாட்ட நாயகனாக செவ்வானம்விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அச்சு அசோக்கும், தொடர் ஆட்ட நாயகனாக இளையதாரகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தம்பாவும் பெற்றுக் கொண்டனர். (05)

# சமுர்த்தி அபிமானி விற்பனை கண்காட்சியும் சந்தையும்



தமிழ் சிங்கள சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு மூதூர்பிரதேசசெயலகம்ஏற்பாடுசெய்திருக்கும்சமுர்த்தி அபிமானி விற்பனைக்கண்காட்சியும், சந்தையும் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் திங்கட்கிழமை மூதூர் பிரதேச செயலக முன்றிலில் நடைபெற்றது.

திங்கட்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சியும் சந்தை நேற்று (செவ்வாய்க்கிழமை)யும் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரையும் நடைபெற்றது.

இதனை திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாசங்க அதிபர் எஸ்.சுதாகரன் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

இதில் இங்குள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் சமுர்த்தி பயனாளிகளின் விவசாய உற்பத்தி மற்றும் சிறு கைத்தொழில் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஆலயத்துக்குள் புகுந்த வாகனம்

## ஆலய மதில் சேதம்; காரைதீவில் சம்பவம்

(வி.ரி.சகாதேவராஜா)

நேற்று(செவ்வாய்க்கிழமை) அதிகாலையில் ஆலயத்துள் அத்து மீறி புகுந்து விபத்துக் குள்ளான கார வாகனத்தால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இச்சம்பவம் செவ்வாய்க் கிழமை அதிகாலை காரைதீவு விபுலானந்தசதுக்கமுச்சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தால்காருக்கும் ஆலயமதிலுக்கும் சேத மேற்பட்டுள்ளது.

கார்ச்சாரதி தெய்வா தீனமாக உயிர் தப்பினார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது -







கொழும்பில் இருந்து கல்முனை சென்றடைய வந்த கார் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

மோட்டார் வாகனமானது காரைதீவு பிரதான வீதி முச்சந்தியில் அமைந்திருக்கும் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் மதிலை உடைத்துக் கொண்டுஉள்ளேசென்றுள்ளது.

மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

(எச்.எம்.ஹலால்தீன் )

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழுங்கப்படும் எனத் தெரவிக்கப் படுகின்றது.

இதில், 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், அதிகரிக்கப் பட்டுள்ள அரச ஊழியர் கொடுப்பன வும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அதாவது, அரச ஊழியர்கள் தற்போது பெரும் சம்பளத்துக்கு அதிகமாக 10,000 ரூபா கொடுப் பனவும் கிடைக்கும் எனத்; தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதியமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழுங்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

தமிழ், சிங்களப் புத்தாண்டில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளதாக, ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும திட்டத்தின் ஊடாக மக்களுக்கான நிவாரணத் தொகை அதிகரிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY
REGISTER & BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# பொது வேட்பாளரை நிறுத்தி வாக்குகளைச் சிதறடிப்பது தமிழர்களின்பிரச்சினைக்கான தீர்வைத் தாமதமாக்கும்

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டு




நாட்டின் ஜனாதிபதியாக ஒருவர் தெரிவான பின்னர், அவரிடம் சென்று தமிழ் மக்களுக்கான தேவைகளையோ அன்றி அவர்கள் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பிலோ பேசி, தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையை உருவாக்குவதற்கே வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பில் இருந்து பொது வேட்பாளரை நிறுத்தும் சில தமிழ் அரசியல் தரப்பினரது செயற்பாடுகள் அமைவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

நாட்டினது சமகால அரசியல் சூழலுக்கேற்ற வகையில் குறித்த ஒரு தரப்பினர் அல்லது தரப்பு வெற்றிபெறும் வேட்பாளராக இருப்பார் எனத் தெரிந்திருந்தும் அதற்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ள ஜனாதிபதி அபேட்சகரையே இன்றுவரை தமிழர் தரப்பிலிருந்து ஆதரிக்கப்பட்டுவரும் துர்ப்பாக்கியமான வரலாறு இருந்துவருகின்றது.

அதாவது தமிழ் மக்களுக்கும் வெற்றிபெற்று நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவாகவுள்ளவருக்கும் இடையே புரிந்துணர்வு அற்றவகையில், அல்லது நேரடியாக சென்று தமிழ் மக்களின் தேவைகளை பேரம்பேசி பெற்றுக்கொள்ள இயலாதவகையில் தமது சுயநல அரசியலை மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் தரப்பினரால் என்றுமே தமிழ் மக்கள் நன்மைகளை பெற்றுக்கொண்டது கிடையாது.

ஆனால் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் ஏதாவதொரு காரணத்தைக் கூறி தமது தெரிவு இவர்தான், இவரை ஆதரியுங்கள் என்று கூறி தமிழ் மக்களை ஆதரிக்குமாறு திசைதிருப்பி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற நிலை மாறி தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை தெரிவுசெய்து நிறுத்துவது தொடர்பில் சில தமிழ் கட்சிகள் முனைகின்றனர். இதேநேரம்சிலர்பொதுவேட்பாளர் தேவையற்றதுஎனகூறுகின்றனர்.

ஆனால் சிலர் சுயநலன்களுக்காக தமிழ் தரப்பிலிருந்துபொதுவேட்பாளரைநிறுத்திவாக்குகளை சிதறடிப்பதனூடாக தமிழரது அரசியலுரிமை பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இல்லாது செய்து பிரச்சினைகளை நீடித்த பிரச்சினையாக வைத்தக்கொள்வதற்கே இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாறாக இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, அல்லது கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன என்றிராது நாங்கள் ஜனநாயக நீதியில்நாட்டின்தலைமையைதெரிவுசெய்வதனூடாக எமது அரசியலுரிமையை பேசுவதற்கான முகாந்தரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

அதேநேரம்நாட்டிலுள்ள அரசியல் முறைமையில் தமிழர் தரப்பால் ஜனாதிபதியாகத் தெரிவாகக் கூடிய அல்லது வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லை என்றே கூறலாம்.

எனவே, இந்ததமிழ்தரப்பினரின்பொதுவேட்பாளர் தெரிவென்பது தேவையற்ற ஒன்றாக இருப்பதுடன் அதனைமுன்வைப்பதும்பயனற்றதாகவேஇருக்கும்.

மாறாகத் தமிழ் மக்கள் பேரம்பேசி தமது வாக்குகளை வெற்றிபெறக் கூடிய தரப்புக்கு வழங்கி அவரை ஆதரித்தால் நிச்சயமாக எமது பிரச்சினைகளுக்கானதீர்வுகளைபெற்றுக்கொள்வது இலகுவாக இருக்கும் என்பதே எமது நிலைப்பாடு என்றும்தெரிவித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (05)

# மடத்தடி மீனாட்சி அம்மனின் அலங்கார உற்சவம் ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் துவி வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் புதுவருடத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

உற்சவகால பிரதம குரு சிவாக மவித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குருசிவஸ்ரீ சீ.கோவர்த்தனசர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமிஅன்றுதீர்த்தஉற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனி இடம் பெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்பபூஜையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூஜை, அம்பாளின் வீதியுலா இடம் பெறும். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படும் . இரவு நேர பூஜை திருவிழாக்கள் இடம்பெறமாட்டாது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி கே. ஜெயசிறில் தெரிவித்தார்.

பத்து தினங்களுக்கான உற்சவகாலதிருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களான சம்மாந்துறை, விநாயகபுரம், பொத்துவில் , ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், திருக்கோவில் ஆகிய கிராமங்கள் பொறுப்பேற்று நடத்துகின்றன. (05)

## முல்லைத்தீவு மாவட்ட

# மேல் நீதிமன்ற நீதிபதியாக அலெக்ஸ்ராஜா நியமனம்



மாவட்ட நீதிபதி ஆசிர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா, மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு வழங்கி ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக கடமையாற்றும் அவருக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவால் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு செல்வபுரத்தில் 1976ஆம் ஆண்டு பிறந்த ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா, முல்லைத் தீவு மகா வித்தியாலயத்தில் உயர்கல்வியை முடித்தார்.

2007ஆம் ஆண்டு நீதிச் சேவை அலுவலகராக நியமனம் பெற்று நீதிபதியாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிவான் நீதிமன்றங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

அக்கரைப்பற்று மற்றும் மன்னார் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியிருந்தார். (05)

# பீடி இலைகளைக் கடத்த முற்பட்ட நபரொருவர் கற்பிட்டியில் கைது




கற்பிட்டி பகுதியிலிருந்து நாகவில்லு பகுதிக்கு பீடி இலைகளை அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கடத்த முற்பட்ட நபரொருவர் புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸார்நேற்று(செவ்வாய்க்கிழமை)காலை பாலாவி பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான லொறியை நிறுத்தி சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டு செல்ல முற்பட்ட பீடி இலைகள் தேங்காய்களுக்குள் சூட்சமமான முறையில் மறைத்து வைத்திருந்தமைக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

இதன்போதுசுமார்17உரைகளில்500கிலோ கிராம்பீடிஇலைகள்கைப்பற்றப்பட்டுள்ளன அத்துடன் நாகவில்லு பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பீடி இலைகள் சுமார் 30 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியென மதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய லொறி ஆகியவற்றை புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என இதன்போது தெரிவித்தனர். (05)

# போதைப்பொருள்: கடத்தல் குறித்து தம்பதியினர்: உட்பட 12 பேர் கைது

போதைப்பொருள் கடத்தல்காரர்களாகச் சந்தேகிக்கப்படும் தம்பதியும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 12 பேரும் ஒருகோடிரூபாபெறுமதியானபொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்; என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மோருக்குளிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 7,000 மில்லிகிராம் ஹெரோயினுடன்சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிரதான சந்தேக நபர்களான குறித்த தம்பதியும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 12 பேரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்பன்னல, கிரியுள்ள , கந்தானகெதர, மாகதுர தங்கொடுவ கொஸ்வத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில்சந்தேகநபர்களிடமிருந்து சொகுசு கார் , 8 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# 7 நாள்களுக்குள் இலங்கை வந்த 39 ஆயிரத்து 798 சுற்றுலா பயணிகள்



இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 39,798 வெளிநாட்டவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கை வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 675,582 வெளிநாட்டவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைவந்துள்ளனர்.

ஏப்ரல் முதல் வாரத்தில் 7,831 இந்தியப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4,892 பேரும் ரஷ்யாவிலிருந்து 4,087 பேரும் ஜேர்மனியிலிருந்து 2,712 பேரும் அதிக எண்ணிக்கையில் இலங்கை வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (05)

# அம்பாறை ஜம்இய்யதுல் உலாமா ஏற்பாட்டில் இன நல்லுறவுக்கான இப்தார் நிகழ்வுகள்







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா ஏற்பாடு செய்த இன நல்லுறவுக்கான இப்தார் வைபவம் திங்கட்கிழமை சாய்ந்தமருது சீ ப்ரீஸ் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் சூரி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வை செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர்கனி தொகுத்து வழங்கினார்.

இதன்போது பேசிய தலைவர் தனது உரையில் –

இஸ்லாம் பிற சமயங்களோடு இணைந்து வாழ்வதை வரவேற்கிறது. எனவே, நாங்கள் எங்களுக்குள் முரண்பாடுகளை, குரோதங்களை, விரோதங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் ஒருவரை ஒருவர் மதித்து, சமய நல்லிணக்கத்தோடு வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து பிரதான உரையாற்றிய தாருல் ஹுதா பெண்கள் கலாசாலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.எல்.எம். முபாறக் மதனி, இஸ்லாத்தின் சகவாழ்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான அம்சங்களைத் தெளிவுபடுத்தினார். இஸ்லாம் கொள்கையின் மார்க்கம், நடைமுறையின் மார்க்கம், மனிதத்துவத்தின் மார்க்கம், ஒழுக்க மாண்பின் மார்க்கம் என்ற நான்கு அம்சங்களை வலியுறுத்திப் பேசிய அவர், வரலாற்றுக் காலங்களில் எவ்வாறு ஏனைய இன மக்களோடு முஸ்லிம்கள் இணைந்தும், பிணைந்தும் வாழ்ந்து வந்தார்கள். அதன் மூலம் இஸ்லாம் எவ்வாறு பரவல் அடைந்தது. அண்மையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் விளைவாக இஸ்லாத்துக்கு ஓர் அவப்பெயர் ஏற்படுத்தப்பட்டது. அந்த அவப்பெயரை ஒரு சிறு குழு ஏற்படுத்தியது. எனவே, அந்தக் குழுவின் செயற்பாட்டுக்கும் இஸ்லாத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற கருத்தை வலியுறுத்திய அவர், இஸ்லாம் வேகமாகப் பரவுகின்ற மார்க்கமாக உலகத்திலே இருக்கின்ற அதேவேளை, இஸ்லாம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற மார்க்கமாகவும் மாறி வருகின்றது.

எனவே, தவறான புரிந்துணர்விலிருந்து சரியான தெளிவையும் சிந்தனையையும் இஸ்லாமிய அறிஞர்கள் ஏனைய சமூக மக்களுக்கு சகவாழ்வு இன நல்லுறவு மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். நீண்ட நேரம் பேசிய அவரது உரையைத் தொடர்ந்து இப்தார் நிகழ்வு இடம் பெற்றது.

இப்தார் வைபவத்தைத் தொடர்ந்து பெரிய நீலாவணை கோயில் குருக்கள் பேசும்போது, இந்து சமயத்தில் எவ்வாறு விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது என்பதையும் அந்த இந்து சமய அனுஷ்டானங்கள் எவ்வாறு மனித வாழ்வுக்கு நிம்மதியைக் கொடுக்கின்றது என்ற கருத்தையும் வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ சமயப் பெரியார் பேசும் போது, கிறிஸ்தவ சமயத்தில் எவ்வாறு உபவாசம் அனுஷ்டிக்கப்படுகிறது. இயேசுபிரான், மேரி போன்றவர்களுடைய நோன்பு எவ்வாறு அமைந்திருந்தது. அது பற்றி பைபிள் என்ன கருத்துக்களை முன்வைக்கிறது என்பன போன்ற சிந்தனைகளை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்தில் உலமாவின் உபதலைவர் விரிவுரையாளர், அஷ்ஷெய்க் எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா தனது நன்றி உரையில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சகவாழ்வு தொடர்பில் தேசிய மட்டத்தில் செயற்படுத்துகின்ற, சமூகங்களுக்கு இடையில் சகவாழ்வு தொடர்பான அந்த வேலைத்திட்டம் எவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவில் நடைபெறுகின்றது என்பதையும் சிங்களப் பகுதிகளில் அது வீரியமாக சிங்களம் தெரிந்த உலமாக்களைக் கொண்டு வந்து அது நடைபெற்று வருவதையும் ஞாபகமூட்டினார்.

அத்தோடு, ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையகம் கொழும்பிலே பல சந்திப்புகளைச் செய்து வருவதாகவும் அண்மையில் இலங்கையில் வதியும் அமெரிக்கத் தூதுவர் ஜம்இய்யாவைத் தரிசித்து, உலமா சபையின் செயற்பாட்டு அம்சங்களைக் கேட்டு அறிந்ததாகவும் இந்த செயற்பாட்டு அம்சங்களை உலமா சபை விரிவாக விளக்கியதாகவும் அதனைத் தொடர்ந்து, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றித்த நிறைவேற்றுக் குழு ஜம்இய்யத்துல் உலமாவைச் சந்தித்ததாகவும் அதன் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதாகவும் நன்றி உரையில் அவர் தெரிவித்து, இதே பணியை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா தொடர்ந்தும் முன்னெடுக்கும். இது ஓர் ஆரம்பம். ஓரிரு மணித்தியாலங்களில் சகவாழ்வு சிந்தனைகளை உருவாக்கி விட முடியாது. மாறாக, முழு நாள் கருத்தரங்கொன்றை, பகல், இரவு உணவாக, தங்குமிட வசதியோடு ஏற்படுத்தி, சகவாழ்வு தொடர்பான ஒரு பிரகடனத்தை அம்பாறை மாவட்டத்திலே எதிர்காலத்தில் ஜம்இய்யத்துல் உலமா வெளியீடு செய்ய இருக்கின்ற தகவலையும் மௌலானா நன்றி உரையின் போது வெளிப்படுத்தினார்.

100 பேரளவு கலந்து கொண்ட இந்த வைபவத்தில், அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள், முன்னாள், இன்னாள் கல்விப் பணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் அதேபோல ஏனைய பள்ளிவாசல்களின் தலைவர்கள், இஸ்லாமிய தஃவா இயக்கங்களின் பிரதிநிதிகள், ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதிநிதிகள், மாற்று மத இந்து சகோதரர்கள், கிறிஸ்தவ சகோதரர்கள் எனப் பலரும் ஆர்வத்தோடு கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தின் நிறைவில் சமயப் பெரியார்களுக்கு அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவரால் பேரீச்சம் பழப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(05)

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு அன்பளிப்பு பொருள்கள் வழங்கல்




(எம். எப். றிபாஸ்)

அம்பாரை மாவட்டத்தில் இயங்கி வரும் ஈ.சீ.எம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நோன்பு பெருநாளை முன்னிட்டு அன்பளிப்பு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.


நிறுவனத்தின் ஸ்தாபகர் உதுமான் கண்டு நாபீர் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசங்களுக்கு சென்று இந்த அன்பளிப்புப் பொருள்களை வழங்கி வருவதுடன் அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்து அவற்றுக்கான உதவிகளையும் செய்து வருகின்றனர்.

மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி போனற பிரதேசங்களுக்கு முதற்கட்டமாக வழங்கி வைத்தனர்.



இதேவேளை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சமூகப் பணியில் ஈடுபட்டுவரும் நாபீர் பவுண்டேஷன், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், சுயதொழில் ஊக்குவிப்புக்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# பேராதனை பல்கலையில் மலர் வசந்தம் ஆரம்பம்



உலகின் அழகிய பல்கலைக் கழகங்களில் ஒன்றாகக் கருதப்படும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மலர் வசந்தம் ஆரம்பமாகியுள்ளது.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள மாரா மரங்களில் சுற்றியிருக்கும் டோலிச்சந்திரா உங்கிஸ் ஆண்டுதோறும் மார்ச் மாத இறுதியில் பூக்கும், ஆனால் இந்த முறை ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் பூக்கள் பூக்கத் தொடங்கியுள்ளன.

ஹந்தான வசினா மஞ்சள் மழை பேராதனையின் மலர் வசந்தம் ஆனது வெளிநாட்டு மக்கள் மத்தியில் பிரபலமானது ஆகும்.

இந்நாள்களில் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமின்றி பேராசிரியர்களும் ஏனையோரும் இந்த அழகை ரசித்து புகைப்படம் எடுப்பது அற்புதமான காட்சியாக உள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.04.2024இல் வெளியிடப்பெற்றது